சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரக்கலை

வாரம் : 02

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

Department Sabaragamuwa Province/ Weekly School Department of Education Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | : | **பயன்பாட்டுத் தேவைகளுக்காக நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | : | **துணிமணிகளுக்கான பல்வகை அமைப்புக் கொண்ட பரவுருவ அலங்கார வேலைப்பாடுகளை நிர்மாணிப்பார்.** |
| **செயற்பாடு** | : | **ஆண் அல்லது பெண்களின் துணி வகைகளுக்கான பரவுருவ அலங்காரங்களை நிர்மாணிப்பார்.** |
| **ஒப்படை** | : | **பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஆண் அல்லது பெண்களின் துணிகளுக்கான அலங்காரத்தை நிர்மாணிக்குக.** |

01. உங்கள் வீட்டிலுள்ள பலவிதமான அலங்காரங்களைக் கொண்ட துணிவகைகள் சிலவற்றை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். அதனை நன்கு அவதானியுங்கள்.

02. அவ் ஒவ்வொரு அலங்காரத்தையும் நன்றாக அவதானித்து உங்கள் விருப்பத்திற்கு ஏற்புடையதாக அலங்கார அலகொன்றை நிர்மாணித்துக்கொள்ளுங்கள்.

03. நிர்மாணித்துக் கொண்ட அலங்கார அலகை சுவட்டுப் பிரதித் தாள்களின் துணையுடன் பிரதியிட்டு வரைதற் தாளில் அவற்றை சரியான கோலம் அமையுமாறு பதித்துக்கொள்க.

04 தளத்துக்குப் பொருத்தமாக பரவுருவ அலங்காரத்தைத் திட்டமிடல், பொருத்தமான அளவீட்டு முறையை உபயோகித்தல், அலகை மீண்டும் மீண்டும் உபயோகித்தல், பரவுருவ அலங்காரத்துக்காக தளத்தை பிரயோகிக்கும் போது ஒரு பக்கத்தில் அலகின் பகுதியொன்றை இடும்போது அதன் மறு பகுதியுடன் அலகு பொருந்தி வருமாறு மறுபக்கத்தில் அலகின் மீதிப் பகுதியை வரைந்துக்கொள்ள வேண்டும்.

05 மேற்கூறப்பட்ட 1,2,3,4 படிமுறையில் பெற்றுக்கொண்ட அவதானத்தின் படி ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரின் துணிகளுக்கான அலங்காரமொன்றினை வரைந்து பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி நிறந்தீட்டுக.

**(நிறப் பிரயோக அறிவிற்காக இணையத்தளத்தில் காணொலியொன்றினை பார்வையிடவும்)**

**(மேற்கண்ட அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தி சிறுவர் புடவைக்கான அலங்காரமொன்றினை வரைந்து நிறந் தீட்டவும்)**